RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt2224s-22264

OPEN ACCESS

# பத்துப்பாட்டு அகநூல்களில் வழிபாட்டு மரபுகள்

வெ. ஜெயலெட்சுமி [அ, *]

[அ] தமிழ்த்துறை, தேசியக்கல்லூரி (தன்னாட்சி), திருச்சிராப்பள்ளி-620001, தமிழ்நாடு, இந்தியா

# Traditions of Worship in the Pathuppaattu Akam Texts

V. Jayalakshmi [a, *]

[a] Department of Tamil, National College (Autonomous), Tiruchirappalli-620001, Tamil Nadu, India

* Corresponding Author: jayatamizh2018@gmail.com

Received: 28.09.2022
Revised: 10-11-2022
Accepted: 16-11-2022
Published: 01-12-2022

## ABSTRACT

Sangam literature is a book that clearly shows aspects of the lives of the ancient Tamils. They have sung equally about the Akam life of the ancient Tamils. Among the classical life activities of human beings, which have continued since then to the present day, the worship of God has been one of the most important forms of worship. In the early days, people used to worship God in a very simple way. They worshipped the things they found in their land. Poojas have also been created in a simple way. On that basis, in the Pathuppaattu, Akam texts of the Sangam literature, there are occasional discourses on sovereignty, concepts of God, and methods of worship. On that basis, this article examines and explains the devotional worship found in the Akam songs of Mullaipattu, Kurinjipaattu, and Pattinapalai within the Pathuppaattu of Sangam literature.

**Keywords:** Tholkappiyam Eluthathikaram, Numbers, Alphabets, Sangam Literature

## முன்னுரை

பண்டைக்காலத்தில் மனிதன் இயற்கையைத்தான் முதன்முதலாக வழிப்பட்டான். அவர்களின் அறிவுக்குப் புலப்படாத இயற்கையை இறையாக வழிப்பட்டான். காலமாறுதலுக்கேற்ப அவன் இறைவனுக்கு உருவம் கொடுத்து உருவ வழிபாட்டின் மூலம் இறைவனை வணங்கத் தொடங்கினான். இறைக்கான உருவத்தை அவனவன் மன எண்ணங்களுக்கேற்பக் கட்டமைத்துக் கொண்டான். கட்டமைத்துக்கொண்ட உருவத்தை மனிதநாகரீகத்தின் உச்ச விளைச்சலான இலக்கியத்தில் ஏற்றினான். தமிழில் பாடப்பட்டுத் தொகுக்கப்பட்ட சங்க இலக்கியங்களில் இத்தகைய சிந்தனைகளை ஏற்றினான். இறைவனைப் பாடியதோடு இறைவனை எவ்வாறெல்லாம் வழிபட்டனர் என்பதையும் படைப்பாக்கக் கருத்தாக்கங்களை அவ்விலக்கியங்களில் பதிவுசெய்துள்ளனர்.

கடவுள் நம்பிக்கையும் வழிபாட்டுநெறிகளும் பழந்தமிழர்களின் வாழ்க்கையில் ஒன்றொடொன்று பின்னிப்பிணைந்தள்ளன. சங்ககால மக்களின் வாழ்வு மேம்படுவதற்கு இத்தகு வழிபாட்டு முறைகள் வழிகோலியது என்றால் மிகையாகாது. பொதுமைத்தன்மையுடனும் இயற்கையோடு இயைந்தும் வைத்திருந்தனர். இப்படிப் பொதுமைத்தன்மையுடன் இருந்த சங்க இலக்கியங்களுக்குப் பிறகான காலத்தில் இறைவனையும் இறைநெறிகளையும் ஒற்றைச் சிமிழுக்குள் அடைக்க முற்பட்டனர். இதன்வழி இறைவனைத் தனித்தனியான உருவத்திற்குள் அடைத்தனர்.

சங்க இலக்கியங்கள் மனித வாழ்விலே என்றும் ஊடாடி நிற்கின்ற அகமரபுகளையும் புறநெறிகளையும் மையப்படுத்திப் பாடியுள்ளன. அவ்விலக்கியங்கள் காலத்தின் கண்ணாடியாகவும் கற்பனையின் உச்சமாகவும் வெளிப்பட்டுள்ளன. அக்காலத்தின் மெய்மைகளைப் படம்பிடித்துக்காட்டும்

துலாக்கோலாகவும் இருந்துள்ளன. சமூகத்தில் மனிதன் கைக்கொண்ட வாழ்வியல் மெய்ப்பாடுகளில் இறைமை குறித்த கருத்தாங்களும் அடங்கும். சங்க இலக்கியங்களான பாட்டும் தொகையுள் பத்துப்பாட்டுள் உள்ள அகநூல்களில் உள்ளமைந்துள்ள இறைமை குறித்த கருத்தாக்கங்களையும் வழிபாட்டு மரபுசார்ந்த செய்திகளையும் விளக்குவதாகவே இவ்வாய்வுக்கட்டுரை அமைகின்றது.

## இறைவழிபாடு

மனிதன் அச்சத்தின் பொருட்டே இறைவனையும் இறைவழிபாட்டையும் உருவாக்கினான். மக்கள் நம்பிக்கையின் அடிப்படையில் இறைவனை வழிபட்டுள்ளனர். எங்கும் நீக்கமற நினைந்திருப்பவன் இறைவன் என நம்பினர். உலகளாவிய கடவுள் நம்பிக்கை வழிபாடு, பூசை ஆகியவற்றைப் பொறுத்து, அளவில் அவை அச்ச அடிப்படையிலும், அன்பு அடிப்படையிலும் தன்னிச்சையாகத் தோன்றித் தழைத்து இருத்தல் வேண்டும். அன்பு காட்டுவனவற்றிற்கு நன்றி காட்டுவதும் அச்சம் ஊட்டுவனவற்றிற்கு அடிபணிவதும் மனிதச்செயல்கள். நிலம், நீர், தீ, காற்று, விண் என்ற ஐம்பூதங்களும் மனிதனுக்கு நன்மைசெய்வனவாயும், தீமை செய்வனவாயும் திகழ்ந்தன. நிலம் அவனுக்குக் காய், கனி, கிழங்குகளைத் தந்து நன்மை செய்தது ஒன்றும் விளையாமல் வாடி வறண்டு, அவனுக்குத் தீமைசெய்தது. நீர் அவன் தாகத்தைத் தணித்தது பயிர்களுக்கு நன்மை விளைவித்து சில சமயங்களில் கொடு மழையாகக் கொட்டியும், கடலாகக் கொந்தளித்தும் துன்பம் விளைவித்தது. தீ அவன் உணர்வுகளைச் சுட, சமைக்க குளிரில் காய நன்மை செய்தது. சில சமயங்களில் எரிபிழம்பாகக் காடுகளை அழித்தது. வீடுகளை அழித்தது, காற்று களைப்புற்று அவனுக்கு உதவியது சுவாசமாக உயிர் தந்தது. சில வேலை புயலாக மாறி அவன் வீட்டையும், காட்டையும் அழித்தது. விண் நிலவாக, மழையாகக் குளிர்ச்சிசெய்தது. கதிர் ஒளியாகப் பயன் தந்தது. மழைபொய்த்தது, கதிர் சுட்டது. ஆக இயற்கை தரும் நன்மைகள் அவனை அன்பு செய்யவைத்தன. அவை படுத்தும் துன்பங்கள் அவனை அஞ்சப்படுத்தின. நன்மைசெய்த ஒருவர் மீது அன்புகாட்டினால் அவர் மேலும் நன்மைசெய்வார். தீமை செய்த ஒருவர் முன் பணிந்துப் போற்றினால் அவர் தீமை செய்யாது இருப்பார். அதன் விளைவே ஐம்பூதவழிபாடு" ஆகும் (Thayammal, 2002). இப்படிக் கருக்கொண்ட வழிபாடும் கடவுளர்களும் பின்னர் பலமாற்றங்களைப்பெற்று இன்று பெருவளர்ச்சிபெற்று அமைந்துள்ளன.

## இறைவனைப் பற்றிய வருணனைகள்

சங்க இலக்கியக் காலத்தில் சமயம் கடவுள் குறித்த சிந்தனைகள் நிறுவனமயமாக்கப்படவில்லை. ஆகவே தெய்வங்கள் குறித்த குறிப்புகள் ஆங்காங்கே எடுத்துரைக்ககப்பட்டுள்ளன. இயற்கையோடு இறைவனை ஒப்பிட்டுக் கூறும் வழக்கம் இருந்துள்ளது. பத்துப்பாட்டு அகநூல்களில் கார்காலம், மழை மற்றும் மன்னர் ஆகியவற்றுடன் இறைவனை ஒப்பிட்டுள்ளனர்.

நப்பூதனார் முல்லைப்பாட்டில் கார்காலம் குறித்த வருகையைக் கூறுகிறபோது, அகண்ட இவ்வுலகத்தை வளைப்பது போல் எழுந்த மேகம், சங்கு சக்கரம் ஆகியவற்றைப் பெற்று, மாவலிக்கு மூன்றடி மண் கொடுப்பதன் பொருட்டு உயரமாக நின்ற திருமாலைப் போல கடலின் நீரை முகந்து பெரிய மலைகளின்மீது தவழ்ந்து மழையை பெய்ய வந்தது என்கிறார். இதனை,

"நனந்தலை யுலகம் வளைஇ நேமியொடு
வலம்புரி பொறித்த மாதாங்கு தடக்கை
நீர்செல நிமிர்த்த மாஅல்போலப்
பாடிமிழ் பனிக்கடல் பருகி வலனேர்பு
கோடுகொண் டெழுந்த கொடுஞ்செல வெழிலி
பெரும்பெயல் பொழிந்த சிறபுன்மாலை" (Somasundranaar, 1956)

என்ற அடிகளின்வழி எடுத்துரைத்துள்ளனர். சங்ககாலத்தில் இதுபோன்ற புராணத்தோடு தொடர்புடைய குறிப்புகள் காணப்படுகிறது.

பகைவனைக் கொல்ல முருகப் பெருமான் ஏந்திய வேலினைப்போல ஒளிர்ந்து அடி இடித்து மழைபொழிவதை,

“சேஎய்

ஒன்னார்க் கேந்திய இலங்கிலை எஃகின்

மின்மயங்கு அருவிய கன்மிசைப் பொழிந்தென” (Somasundranaar, 1956)

என்று குறிஞ்சிப்பாட்டு இடியுடன் மழைபொழிவதை முருகனின் கூர்மையான வேலின் ஒளியுடன் ஒப்பிட்டுக் கூறுகிறது. “வேலும் சேவலும் முருகனுக்குரியவை. இவையிரண்டும் வரலாற்றுக் காலத்துக்கு முற்பட்ட பழைமை வாய்ந்த ஆதிச்சநல்லூர்ப் புதை பொருள்களுக்கிடையிற் கிடைத்தள்ளன. வேல்கள் இரும்பால் செய்யப்பட்டவை இவற்றை நோக்க, முருக வணக்கம் மிகப்பழைய காலத்திலிருந்தே தமிழரிடம் இருந்து வருவது என்பது தெளிவாகும்” (A History of South Indian p.55) தமிழரின் ஆதிமரபுகளில் முருகவழிபாட்டு மரபு முக்கியமானது என்பதைத் தமிழக அகழாய்வுகள் உறுதிப்படுத்துகின்றன. தமிழரின் திணைமரபு வாழ்வியலில் குறிஞ்சி நிலத்திற்குரிய கடவுளாக சேயோனாகிய முருகன் இருந்துள்ளான்.

## மலர்த்தூவி வழிபடும் மரபு

இறைவழிப்பாட்டு முறைகளில் அன்றிலிருந்து இன்றுவரை தொட்டு தொடர்ந்து வரும் மரபு மலர்களைக் கொண்டு இறைவனை வழிபடும் வழிபாட்டு மரபாகும். முல்லைப்பாட்டின்வழி இறைவனை மலர்களைக் கொண்டு வழிபட்டதை அறியமுடிகிறது. முதுபெண்கள் இறைவனை வணங்குவதற்கு முன் வண்டுகள் மொய்க்கும் தேன்நிறைந்த முல்லைப் பூவினையும், நெல்லையும் தரையில் பரப்பி இறைவனை வழிப்பட்டனர். இதனை,

“யாழிசை யினவண்டார்ப்ப நெல்லொடு

நாழி கொண்ட நறுவீ முல்லை

அரும்பவிழ் அலரி தூஉய்க்கை தொழுது

பெருமுது பெண்டிர்”

என்ற முல்லைப்பாட்டு அடிகளின்வழி அறியலாம் (Somasundranaar, 1956).

தொன்மைக் காலச்சமூகம் போரியல் நிறைந்த சமூகமாக விளங்கியது. போருக்குச் சென்ற மன்னர்கள் பகைநாட்டின் நிலத்தை வென்றபிறகு பகைமன்னர்களைக் கொன்றும், அந்நாட்டின் பொன், பொருள்கைளை அள்ளிவருவதோடு, பெண்களையும் கவர்ந்துவந்துள்ளனர். இவ்வாறு கவர்ந்து வந்தப் பெண்களைத் தங்கள் நாட்டில் உள்ள கோயில்களில் அமர்த்தி பூசையையும், வழிபாடையும் செய்யவைத்துள்ளனர். இத்தகைய செயல் சிறிதுசிறிதாக வளர்ந்து பிற்காலச் சோழர்மரபில் தேவரடியார் மரபாக பரிணமித்ததை வரலாறுகளும் இலக்கியங்களும் எடுத்துரைத்துள்ளன. பத்துப்பாட்டு அகநூலான பட்டினப்பாலை பகைநாட்டில் கவர்ந்து வந்த பெண்கள் கோயில்களில் மலர்களைத் தூவி வழிபட்டனர் என்ற செய்தியைச் சுட்டியுள்ளது.

“கொண்டி மகளிர் உண்டுறை மூழ்கி

அந்தி மாட்டிய நந்தா விளக்கின்

மலரணி மெழுக்க மேறிப் பலர்தொழ” (Somasundranaar, 1956)

கவர்ந்து வந்த பகைமன்னர், வீரர்களின் மனைவிமார்களை கோயிலில் பணிசெய்ய வைத்தள்ளனர். அவர்கள் கோயில்களை மெழுகித் தூய்மைப்படுத்தி மாலைப் பொழுதுகளில் விளக்குகளை ஏற்றி, மலர்களைத் தூவி வழிபாடு செய்துள்ளனர் என்பதை இவ்வடிகள் சுட்டியுள்ளன.

நெல், அரிசி, தானியங்கள் வைக்கப்படுகின்ற கலங்களுக்கு முன்பு தரையை மெழுகி வெற்றிலை, பாக்கு வைத்து வழிபாட்டுத் தெய்வத்திற்கு வெண்ணிற அரிசி பலியாகத் தூவப்படும் வழக்கம் இருந்ததைப் பட்டினப்பாலையின் பின்வரும் அடிகளின்வழி அறியஇயலுகிறது.

“கூழுடைக் கொழுமஞ்சிகைத்

தாழுடைத் தண்பணியத்து

வாலரிசிப் பலிசிதறிப்

பாகுகுத்த பசுமெழுக்கிற்

காழூன்றிய கவிகிடுகின்

மேலூன்றிய துகிற்கொடியும்” (Somasundranaar, 1956)

பண்டைத் தமிழர்கள் தங்கள் வழிபாட்டுமுறைகளில் எளிமையைக் கையாண்டுள்ளனர். தங்கள் நிலத்திலே தங்களால் உருவாக்கப்பட்ட, கிடைத்தப் பொருட்களை வைத்தே இறைவனை வழிபட்டுள்ளனர். இவ்வாறு எளிமையாக இருந்த வழிபாட்டு மரபுகள் இன்று ஆடம்பரமாகவும் பகட்டாகவும் மடைமாற்றம் பெற்றறுள்ளது. மேலும், சங்க காலத்தில் தொடங்கப்பட்ட இவ்வழிபாட்டு முறைகள்கள் அப்படியே தடம் மாறாமலும் மிகையாகவுமம் இன்றளவும் தொடர்ந்துகொண்டே வருகிறது வந்துகொண்டிருக்கிறது.

## விளக்கேற்றும் மரபு

இறைவழிபாட்டு முறைகளில் முக்கியமுறை விளக்கேற்றி வழிபடும் முறையாகும். இம்முறை சங்கஇலக்கியக் காலத்திலேயே நடைமுறையில் இருந்துள்ளது. கதிரவன் மறையும் மாலைப் பொழுதில் வீட்டில் இருக்கும் பெண்கள் தங்கள் குடும்பத்தின் நலனைக்காக்க விளக்கேற்றி வழிபட்டுள்ளனர் என்பதனைக் குறிஞ்சிப்பாட்டு உணர்த்துகிறது.

“ஆம்பலந் தீங்கழல் தெள்வளி பயிற்ற

ஆம்பல் ஆயிதழ் கூம்புவிட வளமனைப்

பூந்தொடி மகளிர் சுடர்தலை கொளுவி

அந்தி அந்தணர் அயரக் கானவர்” (Somasundranaar, 1956)

என்று இறைவனை விளக்கேற்றி இருகரம் கூப்பி வணங்கும் மரபு இரண்டாயிரத்து அறுநூறு ஆண்டுகளுக்கு முன்பிருந்து இன்றுவரை வாழையடிவாழையாக தொடர்வதை அறியலாம்.

## தொழிற்களங்களில் இறைவழிபாடு

தொன்மைத் தமிழர்கள் தொழில்செய்யும் இடங்களில் இறைவனை வணங்கிவிட்டே தொழிலைச் செய்துள்ளனர். பட்டினப்பாலையில் மீனவர்கள் தாங்கள் மீன் விற்கும் இடங்களில் இருந்தவாறே இறைவனை வணங்குகின்றனர். தொழில் செய்யும் இடங்களில் இறைவன் வாழ்வதாக எண்ணுகின்றனர். எனவே மீன் விற்கும் இடங்களில் அதன் இறைச்சியை அறுத்து விற்பனை செய்யவதற்கு முன்பு மணல் பரப்பிப் பூக்களைத் தூவி வழிபாட்டினை நடத்துகினறனர்.

“தீம்பகார்த் திரைமுன்றுறை

தூங்கு நாவாய துவன்றிருக்கை

மிசைக் கூம்பி ணசைக் கொடியும்

மின் தடிந்து விடக்கறுத்து

ஊன் பொரிக்கும் ஒலி முன்றில்

மணற்குவைஇ மலர் சிதறிப்" (Somasundranaar, 1956)

அன்று தொடங்கிய தொழிற்கள் வழிபாடு இன்றளவும் இருந்து வருகிறது. இன்றும் மனிதர்கள் எந்தத் தொழிலைச் செய்யத் தொடங்கினாலும் இறைவனை வணங்கியபிறகே தொடங்குகின்றனர். இத்தகைய வழிபாடுகள் இன்று வடவழிபாட்டுடன் இணைந்து பெரும்பூசை மரபாக மாற்றம் கண்டுள்ளது.

## நடுகல் வழிபாடு

தமிழரின் வழிபாட்டு மரபுகளில் குறிப்பிடத்தக்க மரபு நடுகல் வழிபாட்டு மரபாகும். தமிழர்களின் வாழ்வியல் முறைகளில் ஒன்றாக இது இருந்திருக்கிறது. போர்க்களத்தில் இறந்துபட்ட வீரர்களுக்கும், மன்னர்களுக்கும் அவர்களை நினைந்து போற்றும்விதமாக நடுகல் வைத்து வணங்கும் பழக்கம் இருந்திருக்கின்றது. நடுகல் வழிபாடு சங்க இலக்கியம் எங்கும் விரவிக்கிடக்கிறது. சங்க இலக்கியத்தில் அதியமான், கோப்பெருஞ்சோழன், சோழன் ஆகியோர்களுக்கு நடுகல் இருந்ததாக சங்கப் பாடல்களின் மூலம் அறியஇயலுகிறது. வீரர்களுக்கு மட்டுமே நடுகல் நடப்பட்டதாக குறிப்புகள் கிடைக்கின்றன. "விழுப்புண்பட்டு வீரர்கள் இறந்தஇடத்தில் அல்லது அவர்களைப் புதைத்த இடத்தில் அல்லது அவர்களது உடைமைகளை அடக்கம் செய்த இடத்தில் நடப்படும் கல் நடுகல் ஆகும். இக்கல்லில் இறந்த வீரனது உருவம் செதுக்கப்படும். பின்னர் அதற்கு தெய்வ அம்சம் கொடுக்கப்பட்டுப் பூசை நடத்தப்படும். இந்நடுகல் இறந்தவரின் மரபினரால் வழிபடப்படுகிறது. கல்லில் உருவம் செதுக்கப்படுவதற்கு முன்பு அவ்வுருவத்தை ஒவியமாக வரைந்துக் கொள்ளுதலே வழக்கமமாகும். அந்த ஒவியத்தின் உதவிகொண்டே கல்லில் உருவம் செதுக்கப்படும்" என்று இராசமாணிக்கனார் நடுகல்லின் தோற்றம் குறித்து விளக்குகிறார் (Rasamanikanar, 1970). புறநானூறு, அகநானூறு, ஐங்குறுநூறு, பட்டினப்பாலை, மலைபடுகடாம் ஆகிய நூல்களில் நடுகல் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. நடுகல் மீது மயில் இறகு கொண்டு அலங்கரித்தல், கள் ஊற்றுதல், ஆடுகளை துடி அடித்து பலி கொடுத்தல் எனும் வழக்கங்கள் இருந்துள்ளன.

"கிடுகுநிலைத் தெ஼ஃகூன்றி

நடுகல்லின் அரண்போல" (Somasundranaar, 1956)

போர்க்களத்திலே இறந்துபட்ட வீரனின் நினைவாக நடப்பட்ட நடுகல்லில் தெய்வத்தன்மையுடன் வாழுகின்ற வீரன் ஒருவனுக்கு நடுகல் நடப்படும். நடுகல்லைச்சுற்றிக் கேடயங்கள் வேலியைப்போல நிறுத்தப்பட்டு அவற்றைச் சுற்றி வேல்கள் ஊன்றப்பட்டிருக்கும் என்று பட்டினப்பாலை எடுத்துரைத்திருப்பதின்வழி அக்காலத்தில் நடுகல் வழிபாடு இருந்துள்ளதை அறியஇயலுகிறது. நடுகல் வழிபாடு இருந்ததற்கான அகச்சான்றுகளை இலக்கியத்திலும் புறச்சான்றுகளை அகழ்வாய்விலும் காணலாம். இறந்தவர்களுக்கு கட்டிடங்கள் கட்டி வழிபாடு நிகழ்த்தும் முறைகளும் ஈழத்தில் இறந்த மாவீரர்களுக்கு நடப்பட்ட நடுகல் வணக்கத்தின் எச்சங்களே ஆகும்.

## சுறாமீன் கொம்பு வழிபாடு

பரதவர்கள் அமாவாசை நாட்களிலும் பௌர்ணமி நாட்களிலும் மீன் பிடிக்கச் செல்வர். மீன் பிடிக்கச் செல்லாத நாட்களில் தன் மனைவியோடு தழையாலான ஆடைகளை அணிந்துகொண்டு மகிழ்ந்திருப்பர். அந்நேரம் பெரிய சுறாமீன் கொம்பினை மணற்பரப்பில் ஊன்றி அதில் வலிமை பொருந்திய தெய்வத்தை நினைத்து வழிபட்டுள்ளனர்.

"சினைச் சுறவின் கோடுநட்டு

மனைச் சேர்திய வல்லணங்கினான்" (Somasundranaar, 1956)

என்ற பட்டினப்பாலை அடிகள் பரதவர்கள் சுறாமீன் கொம்பை வைத்து இறைவழிபாடு செய்ததை எடுத்துரைத்துள்ளதின்வழி மக்கள் கடலில் காணப்பட்ட பெரிய உருவமான கொம்பை வைத்து அச்சம் காரணமாக வழிபட்டிருக்கலாம்.

## முருகவழிபாடு

சங்க இலக்கியங்கள் மனிதனின் அக உணர்வான காதல் உணர்வை நிரம்பப் பாடியுள்ளன. காதல் வயப்பட்ட தலைவி தலைவன் பிரிவால் வாடி நோய்வாய்ப்படுகிறாள். அதனைக் கண்ட தலைவியின் தாய், கட்டுவிச்சியை அணுகி இந்நோய்க்கான காரணம் கேட்கின்றாள். அவர்கள் இது தெய்வத்தால் ஆனது என்றும், அது மலைமேல் இருக்கும் தெய்வத்தால் இந்நோய் உருவானதென்றும் அறிந்த பிறகு வெறியாட்டு சடங்கு நிகழ்த்தியுள்ளனர். "முருகனைப் போல வேடம் பூண்டு கையில் வேலேந்தி ஆடும் மலைநாட்டுப் பூசாரி வேலன் எனப்பட்டான். அவன் குறமகளது நோய் முருகனால் வந்ததென்று ஐயுரின், அக்கடவுளைத் திருப்பதிசெய்ய ஒரு களத்தை அமைத்துப் பூசையிட்டு ஆடிபாடி வழிபடுவது வழக்கம். அவன் இங்ஙனம் பூசையிட்டு வழிபாடுசெய்தல் வெறியாட்டு எனப்படும்." தெய்வத்திற்கு முறையாக மலர்களை தூவி வணங்கி, நறுமணப் பொருட்களைக் காணிக்கையாகக் கொடுப்பதை,

"கடுநோய்

அதனுள் ஆங்கண் அறியுநர் வினாயும்

பரவியுந் தொழுதும் விரவுமலர்தூயும்

வேறு பல்லுருவிற் கடவுட் பேணி"

என்ற பாடல் அடிகள் மூலம் குறிஞ்சிப்பாட்டு விளக்குகிறது (Somasundranaar, 1956).

இப்படி முருக வழிபாட்டை அகநெறியோடு சங்க இலக்கியங்கள் பதிவுசெய்துள்ளன. வேலன் என்னும் பெயருள்ள பூசாரி மீது முருகன் வந்து ஆடுவது வேலன் வெறியாட்டு என்கின்றனர்." வேலன் மட்டுமே சங்க இலக்கியத்தில் காணப்படும் பூசாரி என்று கருதலாம். களவியலில் தலைவனோடு உறவு கொண்ட தலைவி, அத்தலைவனுக்காக ஏங்கித் துயருற்றுப் பசலை எய்தும்போது அவளுடைய அன்னை கவலையுறுகிறாள். தன் மகளைப் பிடித்துள்ள கெட்ட தேவதையை விரட்ட அவள் வேலனை அழைக்கிறாள். வேலன் அக்கெட்ட தேவதைகளை விரட்ட முருகனை வழிபடுகிறான். முருகனுக்கு ஒரு ஆட்டைப் பலியாகக் கொடுக்கிறான். முருகனது பெயரை உச்சரித்து மந்திரம் சொல்லுகிறான். தலையில் களம் ஒன்றமைத்து அக்களத்தில் ஆட்டின் இரத்தத்தைத் தெளிக்கிறான். வேலனது வெறியாட்டத்தோடு பெரும்பாலும் இச்சடங்கு முடிவடைகிறது. என்பதன்வழி வேலன் வெறியாட்டு நிகழ்வில் பலிகொடுக்கும் வழக்கம் இருந்துள்ளது என்பதை அறியமுடிகிறது. திருமுருகாற்றுப்படை, கல்லாடம் போன்ற நூல்களிலும் வேலன் வெறியாட்டம் தொடர்பான செய்திகள் இடம்பெற்றுள்ளன.

குறிஞ்சிப்பாட்டில் தலைவியையும் தோழிகளையும் துரத்தி வந்த யானை அவ்விடம் விட்டு அகன்ற போது, தெய்வம் தீண்டித் துன்பமுற்ற பெண்கள் முருகனுக்கு ஆடுவெட்டிப் பலி கொடுத்த இடத்தைப் போல் காணப்பட்டதாம். இதனை,

"நெடுவேள்

அணங்குறு மகளிர் ஆடுகளங் கடுப்பத்" (Somasundranaar, 1956)

என்ற அடிகள் மூலம் வேலன் வெறியாட்டு நிகழ்வு அக்காலத்தில் நிகழ்ந்ததைக் கூறுகிறது. "தமிழர் வீரத்தையும் வீரச்செயல்களையும் பொன்னேப் போல் போற்றினார்கள். வீரர்களின் வீரச்செயல்களைப் புகழ்ந்துக் கவிபாடி இலக்கியம் எழுதினார்கள். வீரதெய்வங்களாகிய முருகனையும், கொற்றவையையும் வழிபட்டு, அவற்றிற்கு ஆடு, கோழி முதலியவற்றை பலியிட்டு வாழ்த்தினார்கள். உயர்ந்தவர் முதல் தாழ்ந்தவர் வரையில் இவ்வழக்கம் எல்லோரிடத்திலும் இருந்தது. அக்காலத்து பார்ப்பனரும், ஏனைய நாட்டுப் பார்ப்பனரைப் போலவே மாமிச உணவு சாப்பிடும் வழக்கம்

உள்ளவாறாக இருந்தனர். முயலையும், நாய்கள் பிடித்துக்கொண்டு வந்த உடும்பையும்கூட உண்டார்கள்." என்பதும் இங்கெ நினைவுகூறத்தக்கது (Venkatasamy 2005).

காவிரிபூம்பட்டினத்து வணிகர்கள் வீதியில் வசிக்கும் பெண்கள் அங்கு நடக்கும் விழாக்களை ரசித்தபடியே தெய்வத்தை இருகரம் கூப்பி வணங்குவார்களாம், அங்கே வெறியாடல் நடக்கும்போதும் முருகன் உள்ளிட்ட தெய்வங்களுக்கு திருவிழாக்கள் நடக்கும்போதும் புல்லாங்குழல், யாழ், முரசு முதலிய இசைக்கருவிகள் கொண்டு இசைக்கப்பட்டு திருவிழாக்கள் சிறப்பாக நடைபெறும் என்பதை.

"செறிதொடி முன்கை கூப்பச் செவ்வேள்

வெளியாடு மகளிரொடு செறியத்தாஅய்க" (Somasundranaar, 1956)

என்று பட்டினப்பாலை பாடல் அடிகள் உணர்த்துகிறது. சங்க இலக்கியங்கள் காணப்படுகிற முருகவழிபாடு அகவழக்கத்தோடு நெருங்கியத் தொடர்புடையதாக விளங்கியுள்ளது. "குறிஞ்சிநில மக்களால் செய்யப்பட்டதாக மேலே கூறப்பட்ட முருக வழிபாட்டில் வேதங்களிலே ஆகமங்களிலே அறிவு பெற்ற புரோகிதர் இடம்பெறவில்லை என்பது கவனத்திற்குரியது. குறிஞ்சிநிலமக்கள், தாங்கள் தொன்றுதொட்டு வழிபட்டு வந்த முறையிலேயே வழிபட்டு வந்தார்கள் அத்தகைய வழிபாட்டில் தங்கள் கடவுள் வெளிப்படுவான் என்று நம்பினார்கள். அக்கடவுள் அவருள் ஒருவர் மீது ஆவேசித்து வெளிப்படுதலே வழக்கமாக இருந்தது. இவ்வழக்கம் இன்றும் தமிழரிடையே இருந்துவருகிறது. முருகனால் ஆவேசிக்கப்பட்டவன் வேலன் எனப்பட்டான்." (Narayana Ayyar, 1939) குறிப்பாக முருகனுக்கு பலிபூசைகள் நடத்தப்பட்டதை அறிய இயலுகிறது. பலிபூசைகளுக்கு உரியவராக விளங்கிய முருகப்பெருமானை பிற்காலத்தில் நிறுவன சமயமான சைவ சமயத்திற்குள் அடக்கி ஆகம முறைகளுக்கு உட்படுத்தி பலிபூசைகளற்ற சைவக் கடவுளாக ஆக்கப்பட்டிருக்கிறார்.

## நம்பிக்கைகளும் சடங்குகளும்

நம்பிக்ககைகளும் நம்பிக்கையின் அடிப்படையில் தோற்றம்பெற்ற சடங்குகளும் மனித வாழ்க்கையில் தொன்றுதொட்டு வருகின்றன. "நம்பிக்கைகள் மனிதவாழ்வில் மிகவும் இன்றியமையாத கூறாகும். நம்பிக்கைகளை ஒவ்வொரு மானிட இனமும் தங்களுக்கு ஏற்றாற்போல் தகவமைத்துக்கொண்டது. "நம்பிக்கை என்பது ஒன்றின் உண்மையை எற்றுக் கொள்வதாகும். நம்பிக்கைகளின் அடிப்படை அகமனம் என்பர். மனிதவாழ்வின் உறுதிப்பாட்டிற்கு ஆதரவு தரும் இந்நம்பிக்கைகள் மனித வாழ்வில் மிக இன்றியமையாதது என்பார் வின்செஸ்டர்" வேலன் வழிபாட்டில் வருகின்ற வெறியாட்டில் நிகழ்த்தப்படுகின்ற சடங்குகள் இப்படிப்பட்டவைதான் (Sanmuga Sundaram, 2003).

## விரிச்சிகேட்டல் எனும் நம்பிக்கை

விரிச்சிக் கேட்டல் என்பதும் சகுனம் பார்த்தல் என்பதும் தமிழரின் வாழ்விலே தொன்றுத்தொட்டு வரும் நீண்ட நெடிய மரபு என்பதை தொல்காப்பியத்தின் வழியும், சங்கப்பாக்களின் வழியும் அறியஇயலுகிறது (Iampuranar, 1956). அகமரபில் விரிச்சிக்கேட்டல் மரபு இருப்பது போல புறமரபில் போரியல் சார்ந்த நிகழ்வுகளுக்குச் செல்லும் முன்பு விரிச்சிக்கேட்டு நிமித்தம் பார்த்துச் சென்றுள்ளனர். கார்காலம் தொடங்கியவுடன் வருவதாகக் கூறிச்சென்ற தலைவனின் வரவை எண்ணி தலைவி வருத்தமுற்றாள். அவளைத் தேற்றும் விதமாக இறைவனைத் தொழுது வணங்கும் முதுபெண்கள் அவர்கள் வரும் வழி முழுவதும் நல் விரிச்சி கேட்டதாகக் முல்லைப்பாட்டு சுட்டிநிற்கிறது.

"பெருதுமுது பெண்டிர் விரிச்சிநிற்பச்"

"இன்னே வருகுவர் தாயரென்போள்

நன்னா நன்மொழி கட்டன்" (Somasundranaar, 1956)

என்று தாயிற்கு காத்து நிற்கும். கன்றிடம் உன்தாய் விரைவில் வருவாள் என்று சொல்லும் நல்நிமித்தம் கேட்டோம்.

பறவைகள் பறப்பதைக்கொண்டும், ஒலிப்பதைக்கொண்டும் சில நம்பிக்கைகள் வழங்கின. கிரேக்கர். உரோமரிடத்தும் இத்தகு நம்பிக்கைகள் இருந்தன. சில பறவைகளை, அவற்றின் ஒலியினைக்கொண்டு நன்மையின் அறிகுறியாகவும், தீமையின் அறிகுறியாகவும், கருதினர்.

"நாளன்று போகிப் புள்ளிடை தட்ப"

என்ற புறநானூற்றுப் பாடல்வரி பறவைகளின் குரலோசையில் நிமித்தங்கள் பார்ப்பதை வழக்கமாகக் கொண்டுள்ளனர் என்பதை சுட்டுகிறது.

"மதனால

நல்ல நல்லோர் வாய்ப்புள் தெவ்வர்" (Somasundranaar, 1956)

பறவையின் ஒலிக்குறியீடும் நல்நமித்தத்தையே கூறுகிறது என்பன போன்ற செய்திகளும் முல்லைப்பாட்டில் குறிக்கப்படுகின்றன. எனவே, தலைவன் விரைவில் வருவான் என்பதையே நல் நிமித்தங்கள் உணர்த்துகின்றன. இத்தகைய நிமித்தங்கள் இன்று நல்நிமித்தங்கள் தீ நிமித்தங்கள் எனப் பாகுபடுத்தப்பட்டு மக்கள் வழக்காறுகளில் ஊடாடிக் கிடக்கின்றன.

## முடிவுரை

சங்க இலக்கியம் பதிவுசெய்துள்ள மனிதர்கள் இயற்கையோடு இயைந்த நெறிமுறையான வாழ்வியலை வாழ்ந்துள்ளனர். இயற்கை அவ்வப்போது நிகழ்த்திய மீறல்களைக் கண்டு அச்சமுற்றும், அவற்றின் மீதுள்ள அன்பின் பொருட்டும் இயற்கையை வழிபடத்தொடங்கினார். சங்க இலக்கியங்களில் பத்துப்பாட்டு அகநூல்கள் இறைவனை மலர்கள் தூவி, விளக்கேற்றி வணங்கி வழிபடுவதையும், நடுகல் நட்டு வழிபடுவதையும் பரதவர்கள் சுறாமீன் கொம்பினை நட்டு வழிபடுவதையம், மீன் விற்பவர்கள் அவர்கள் வாணிபம் செய்யும் இடத்தில், தானியங்கள் போட்டு வைத்திருக்கும் கலங்கள் முன் தரையை மெழுகி இறைவனை வழிபடும் வழக்கத்ததையும், அகவாழ்வில் சடங்குடன் கூடிய முருக வழிபாட்டையும் செய்து வந்துள்ளனர் என்பன போன்ற வழிபாடடு செய்திகளை எடுத்ததுரைத்திருப்பதின்வழி அக்கால வழிபாட்டு முறைகளின் தன்மைகளை அறிய இயலுகிறது. பத்துப்பாட்டு அகஇலக்கியங்கள் மக்களிடையே ஊடாடி கிடக்கும் நம்பிக்கைகளையும் சடங்குகளையும் எடுத்துரைத்துள்ளன. பறவைகளின் ஒலி, மக்கள் பேசும் நல்ல சொற்களிலும், நல்நிமித்தம் பார்க்கும் வழக்கம் இருந்துள்ளன என்பதையும் அறியஇயலுகிறது. சங்கஇலக்கியக் காலத்தில் இறைமையும், வழிபாடும் ஆரம்பநிலையிலேயே இருந்திருக்கின்றன. இறைவன், இறைவழிபாடு ஆகியன ஆகமநியதிகள் நிறுவன சமயங்கள் பெருக்கக் காலத்ததைப் போல் அல்லாமல் மிகக் குறுகிய அளவிலேயே நிகழ்ந்துள்ளதைப் பத்துப்பாட்டு அகநூல்கள் வழி அறியஇயலுகிறது.

## References


Iampuranar, (1956) Tholkappiyam, Saiva Siddhanta Works Publishing Society, Tinnevelly, Limited, Chennai, India

Narayana Ayyar, C.V. (1939) Origin and Early History of Shaivism in South India, University of Madras, Chennai, India

Rasamanikanar, M. (1970) Pathupaatu Araichi, University of Madras, Chennai, India

Sanmuga Sundaram, (2003) Folklore Study, Kaviya Pathippagam, Chennai, India

Somasundranaar, P.V. (1956) Pathupattau, Saiva Siddhanta Works Publishing Society, Tinnevelly, Limited, Chennai, India

Thayammal, A. (2002) Tamil Samugaviyal Oru Karuthadal, International Institute of Tamil Studies, Chennai, India

Venkatasamy, M.S. (2005) Samayangal Valartha Tamil, Nam Tamilar Pathippagam, Chennai, India

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License